(இ) மணக்காடு கிராமத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களில் இரண்டு பேர் மறைவு.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நாகர்கோவில் கிராமத்தைச் சேர்ந்த மணக்காடு என்ற கிராமத்திலிருந்து 17–6–1981ஆம் நாள் கடலில் மீன்பிடிக்கச் சென்ற 4 பேர்களில் இரண்டு பேர்கள் மறைந்துவிட்டார்கள். திரும்பவே இல்லை. மற்ற இரண்டு பேர்கள் மயக்கமாக நிலையில் 5 நாட்கள் கழித்து தலைமன்னார் என்ற இடத்தில் ஒதுக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை இலங்கை அரசு எடுத்துச் சென்று சிகிச்சை அளிக்கும்போது, மாண்ட்ரோஸ் என்பவர் இறந்து விட்டார், மீதம் உள்ள ஒருவர் அருள்மணி என்பவர்......(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஆளும்கட்சியின் உறுப்பினராகத்தான் இருக்கிறீர்கள். பிரச்னையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பினால் வேறு வகையாகக் கொண்டு வந்து தீர்த்துக் கொள்ளலாம். இங்கே அவையில் அதைக் கொண்டு வந்து தீர்த்து வைக்க முடியாது. ஆகையால் தயவுசெய்து உட்காருங்கள்.

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 44ஆவது விதியின் கீழ் அவை உரிமை மீறல் குறித்து பிரச்னை ஒன்றை திரு. உமாநாத் அவர்கள் அவையில் எழுப்ப அனுமதி கேட்டிருக்கிறார்கள். ......(குறுக்கீடு). (கூச்சல், குழப்பம்)

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, ஆளும்கட்சிக்கு மட்டும் அனுமதி கொடுக்கிறீர்கள். எதிர்க்கட்சியினருக்கு வாய்ப்பு கொடுக்க மறுக்கிறீர்களே, இது நியாயமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களுக்கு அனுமதிகொடுத்திருக்கிறேன். அவர்ஒன்றும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் இல்லை. தவிர இருக்கும் மற்றப் பிரச்னைகளையும் பார்க்க வேண்டும். அங்கத்தினர்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு இன்னும் 7, 8 பில்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. ஒவ்வொருவரும் அதில் தங்கள் சிந்தனைகளை செலவழித்து பேச இருக்கிறீர்கள். அதை எல்லாம் விட்டு விட்டு இப்படி திடீர் திடீர் என்று பிரச்னைகளைக்கிளப்பிக் கொண்டிருந்தால் தீர்த்து விட முடியாது திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் மிகவும் முக்கியமான பிரச்னையை நியாயமானதை எழுப்பினார். அதனால் அனுமதித்தேன்.